அலங்காநல்லூர் பகுதியில் கனிவளங்கள்.

* 139 வினா.— திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைப் பகுதியிலும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் விலை உயர்ந்த தாதுப் பொருள்கள் கிடைப்பது உண்மையா ?

மாண்புமிகு திரு செ. மாதவன்: இல்லை.

திரு. பி. எஸ். மணியன் : இந்த சர்க்கரை ஆலை நிர்மாணிக்கப்பட்ட நேரத்தில் நீர் ஊற்று ஆராய்ச்சிக்கு வந்த வெளிநாட்டு நிபுணர்கள் இந்த இடத்தில் விலை உயர்ந்த தாதுப் பொருள்கள் இருப்பதாக எழுதி வைத்திருக்கிறார்கள். அது அந்தச் சர்க்கரை ஆலையில் வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குறிப்பைப் பற்றி மறுபரிசிலனை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பல ஆண்டுகளாக அந்தச் சர்க்கரை ஆலையின் தலைவராக இருந்து வரும் மாண்புமிகு உறுப்பினர் இன்றைக்குத்தான் அந்தத் தகவலை கூறி இருக்கிறார்கள். அதுபற்றி எழுதி அனுப்பினால் பரிசீலிக்கப் படும்.

Industrial potentialities in Tiruttani taluk

* 140 *Q.*—Thiru E. S. THYAGARAJAN : Will the Hon the Minister for Industries be pleased to state—

(*a*) whether any investigations to explore the industrial potentialities in Tiruttani taluk have been made so far; and

(*b*) the results if any achieved in this regard?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை

(இ) கேள்விக்கு இடமில்லை.

Appointment of District Munsiffs

* 141 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that an interview has taken place by the Madras Public Service Commission for the selection of posts of District Munsiffs around the second week of September 1971 ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம் நேர்முக நியமனமுறை மூலம் மாவட்ட முன்சீப்புகளாக நியமிக்க 15 பேர்களைத் தெரிந்தெடுத்தது ; சார்நிலை மாஜிஸ்ட்ரேட்டு களிலிருந்து 12 பேர் பதவி மாற்றல் மூலம் மாவட்ட முன்சீப்பு

1972 சனவரி 29]

களாக நியமிக்கப்படத் தகுதி பெற்றவர் என்று பரிவுரை செய்தது. இந்த 27 பேர் அனைவரும் அரசின் ஏற்பளிப்பு பெற்ற பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

DR. H. V. HANDE : Sir, may I know whether it is a fact that complaints were received by the Government that the norms which were originally fixed for this selection have been completely ignored and a new method has been adopted with regard to it ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படிப்பட்ட தகவல் இல்லை. அரசியலமைப்புச் சட்டப்படி நடத்தப்படுகிறது. உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் இருக்கின்றார். சொ்விஸ் கமிஷன் அங்கத்தினர்கள் உடன் இருந்து தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள். நாம் அப்படியே ஏற்றுக் கொள்ளுகிறோம். அவர்களுடைய சிபாரிசு எதையும் நாம் மறுக்கவில்லை.

தஞ்சாவூர் மாவட்டத்தில் நிலநீர்

* 142 வின—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் பூமிக்கடியிலுள்ள நீரைக்கொண்டு விவசாயம் செய்ய தமது அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நீர்ப்பாசன வசதிக்காக நிலநீரை இறைக்க மாவட்டத்தில் ஏற்கனவே 10,000 வடிகுழாய்க் கிணறுகளும், குழாய்க் கிணறுகளும் உள்ளன. சர்வதேச வளர்ச்சிச் சங்கத்திட்டத்தின் கீழ் 7,000 வடிகுழாய்க் கிணறுகளும், 1,000 குறைந்த ஆழக் குழாய்க் கிணறுகளும், 90 நடுத்தர ஆழக் குழாய்க் கிணறுகளும் இந்த மாவட்டத்தில் அமைத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதைத் தவிர விவசாய மறுநிதி உதவி நிறுவனத் திட்டத்தின் கீழ் கிணறுகள் அமைத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. ஆ. பரந்தாமன் : கிரவுண்ட் வாட்டர் செல் தன்னுடைய பணியைப் பல வட்டங்களில் தொடங்கவில்லை. இதன் காரணமாக நில்வள வங்கிகள் கடன் கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, கிரவுண்ட் வாட்டர் செல் தன்னுடைய பணிகளை திருத்தணி போன்ற வட்டங்களில் தொடங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கிரவுண்ட் வாட்டர் டிவிஷன் ஒரு இயக்குநரின் கீழ் பணியாற்றி வருகிறது. தமிழ் நாடு முழுவதும் பரிசீலிக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அது ஒரு நீண்டகாலத் திட்டமாகும்.